**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி 31–ம் நாள்**

**இடை நிலை மனு எண்.07/2025**

**இன்**

**அசல் வழக்கு எண். 202/2017**

1. முத்தம்மாள்
2. ஆனந்தி
3. பழனி
4. அண்ணாதுரை (பொது அதிகார முகவர்)

... மனுதாரர்கள் / வாதிகள்

**//எதிர்//**

1. பழனி கவுண்டர் (இறப்பு)
2. சிவகாமி

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

1. பழனியம்மாள்
2. விஸ்வநாதன்
3. ஏழுமலை
4. உமா
5. சந்திரகேசன்
6. அசோக்குமார்
7. மலர்விழி

..... உத்தேச பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 20.08.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. மூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. முருகன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும்,

ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>**உத்தரவு**</u>

இறந்த 1–ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 163 நாட்கள் காலதாமதத்திற்காக காலவரையறை சட்டம் பிரிவு 5, மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 –ன் படி தாக்கல்.

<u>**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**</u>

மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமை விளம்புகை நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் வழக்கின் 1–ம் பிரதிவாதியான பழனி கவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024–ம் தேதியில் இறந்துவிட்டார். இறந்த 1–ம் பிரதிவாதிக்கு அவரது மனைவி பழனியம்மாள், 2–ம் பிரதிவாதி சிவகாமி மற்றும் மகன் வைஸ்ராயர், மாணிக்கம் மற்றும் மகள் மாதம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். இதில் 2–ம் பிரதிவாதி சிவகாமி ஏற்கெனவே வழக்கில் தரப்பினராக இருந்து வருகிறார். 1–ம் பிரதிவாதியின் மகனான வைஸ்ராயர் என்பவர் விஸ்வநாதன், ஏழுமலை, உமா ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். 1–ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான மாணிக்கம் என்பவரும் அவரது மனைவி லட்சுமி என்பவரும் வாரிசுகள் யாருமின்றி இறந்து விட்டார்கள். 1–ம் பிரதிவாதியின் மகளான மாதம்மாள் என்பவர் சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோரை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். தற்போது 1–ம் பிரதிவாதியின் மனைவி பழனியம்மாள் மற்றும் விஸ்வநாதன், ஏழுமலை, உமா, சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோர்களை 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளாக வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க 150 நாட்களுக்குள் மனு செய்திருக்க வேண்டும். ஆனால் உத்தேச பிரதிவாதிகளின் விலாசங்களை சேகரித்து உரிய

காலத்திற்குள் மனு தாக்கல் செய்வதற்குள் 163 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என இம்மனு தாக்கல்.

**3. 2–ம் எதிர்மனுதாரர்களின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மேற்படி வழக்கில் 1–ம் பிரதிவாதியான பழனிகவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024–ம் தேதியில் இறந்து விட்டார் என்று கூறியுள்ளதும், 1–ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான மனைவி பழனியம்மாள், விஸ்வநாதன், ஏழுமலை, உமா, சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது என்பதும் உண்மை. மேற்படி மனுதாரரின் மனுவில் 1–ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்பதால் மேற்படி 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினராக சேர்த்தால் தான் முழுமையான தீர்வு ஏற்படும் என்பதும், இறந்த 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்க்க வழக்கில் வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டியுள்ளது என்றும், முற்றிலும் தவறான சங்கதிகளை தெரிவித்து மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரரின் மனுவில் 2–ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை தரப்பினராக சேர்க்க கால தாமதமாக மனு தாக்கல் செய்துள்ள காரணத்தாலும் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

**4.தீர்வுக்கான பிரச்சனை :–**

1. மனுதாரர் மனு அனுமதிக்க கூடியதா ?

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

**5.தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் வழக்கின் 1–ம் பிரதிவாதியான பழனி கவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024–ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்த 1–ம் பிரதிவாதிக்கு அவரது மனைவி பழனியம்மாள், 2–ம் பிரதிவாதி சிவகாமி மற்றும் மகன் வைஸ்ராயர், மாணிக்கம் மற்றும் மகள் மாதம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள் என்றும், இதில் 2–ம் பிரதிவாதி சிவகாமி ஏற்கெனவே வழக்கில் தரப்பினராக இருந்து வருகிறார் என்றும், 1–ம் பிரதிவாதியின் மகனான வைஸ்ராயர் என்பவர் விஸ்வநாதன், ஏழுமலை, உமா ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், 1–ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான மாணிக்கம் என்பவரும் அவரது மனைவி லட்சுமி என்பவரும் வாரிசுகள் யாருமின்றி இறந்து விட்டார்கள் என்றும், 1–ம் பிரதிவாதியின் மகளான மாதம்மாள் என்பவர் சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோரை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் என்றும், தற்போது 1–ம் பிரதிவாதியின் மனைவி பழனியம்மாள் மற்றும் விஸ்வநாதன், ஏழுமலை, உமா, சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோர்களை 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளாக வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க 150 நாட்களுக்குள் மனு செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால் உத்தேச பிரதிவாதிகளின் விலாசங்களை சேகரித்து உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்வதற்குள் 163 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டு விட்டது என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி வழக்கில் 1–ம் பிரதிவாதியான பழனிகவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024–ம் தேதியில் இறந்து விட்டார் என்று கூறியுள்ளதும், 1–ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான மனைவி பழனியம்மாள், விஸ்வநாதன், ஏழுமலை, உமா, சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது என்பதும் உண்மை என்றும்

எடுத்துரைத்திருப்பதாலும், மேற்படி உத்தேச தரப்பினர்கள் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்பதாலும் அவர்கள் தரப்பினராக சேர்த்தால் தான் இவ்வழக்கில் இறுதி தீர்வு எட்டப்பட முடியும் என்பதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை எதிர்மனுதாரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் எனில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1,000/-யை 25.09.2025-க்குள் செலுத்த வேண்டும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். அழைக்க. 26.09.2025.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (16.09.2025) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P
Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை .**

**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** **இல்லை.**

THIRUGNANASAMBANDAM P
Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.